**தலைப்பு 301 – கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2021 ஆகஸ்ட் 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஒக்தோபர் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக் கூற்றுக்கள் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக.

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| செலவின விடய எண் 301-1-1-1-1701 இன் கீழ் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு இல்லாதிருந்ததுடன், நிதிப்பிரமாணம் 66/69 இன் கீழ் ரூபா 54,250 ஆன நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. திறைசேரி கணினி அச்சீட்டின் பிரகாரம் அந் மொத்த நிதியேற்பாடும் எஞ்சியிருந்ததுடன், நிதிச் செயலாற்றல் கூற்றில் அது செலவினமொன்றாக காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால், மொத்த மீண்டெழும் செலவினம் ரூபா 54,250 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் போது திணைக்கள வளாகத்தில் தீப்பிடித்தல் சம்பமொன்று இடம்பெற்றிருந்ததுடன், அதன் போது ஏற்பட்ட நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் நி.பி. 108 இன் கீழ் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் கீழ் பதிவழிக்கப்பட்டது. அதன் பிரகாரம் அந்த கட்டளை கிடைத்த பினர் 2020 ஆம் ஆண்டின் போது 301-1-1-1-1701ஆம் இலக்கத்தின் கீழ் ரூபா 54,250 ஆன தொகை நி.பி.66 இன் கீழ் மாற்றப்பட்டிருந்தது. அரச கணக்குகள் திணைக்களத்திடம் விசாரித்த போதிலும், சிகாஸ் முறையில் இந்த பதிவழிப்பினை கணக்கு வைத்தல் தொடர்பில் திட்டவட்டமான அறிவுரையொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறான போதிலும், நி.பி. 66 இன் கீழ் நிதியேற்பாடுகளின் மாற்றலொன்று இடம்பெற்றமையாலும், அந்த நட்டங்கள் மற்றும் இழப்புகள் தொடர்பில் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டமையாலும் 301-1-1-1-1701 ஆம் இலக்க செலவினத் தலைப்பின் கீழ் இறுதிக் கணக்குகளுக்கு இது உள்ளடக்கப்பட்டது. அதன் காரணமாக மொத்த | திறைசேரி கணினி அச்சீடுகளுக்கு இணங்க நிதிச் செயலாற்றல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மீண்டெழும் செலவினமாக ரூபா 54,250 அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்தது. | |

**1.6.2 கட்டுநிதி சீராக்கல் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| கட்டுநிதிச் சீராக்கல் கணக்கின் 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் கட்டுநிதி மீதி ரூபா 54,520 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | மேற்படி விடயங்களின் காரணமாக கட்டுநிதி சீராக்கல் கணக்கின் 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் கட்டுநிதி மீதி ரூபா 54,520 இனால் குறைவாக காண்பிக்கப்பட்டுள்ளது. எவ்வாறான போதிலும், சீராக்கங்களின் கீழ் அது சரியாக காண்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், 2020.12.31 ஆந் திகதியில் உள்ளபடியான கட்டுநிதி மீதி சரியானது ஆகும். | திறைசேரிக் கணினி அச்சீடுகளுக்கமைய நிதிச் செயலாற்றல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

**1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) வருமானமல்லாத பெறுவனவுகளாக ரூபா 3,666,366 தொகை காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், அது காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 644,660 ஆக காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் ரூபா 3,021,706 இனால் குறைத்துக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021ஆம் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்றின் சரியான வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்குகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகு குறிப்பிடப்பட்டிருந்தது. | சரியான தரவுகளின் அடிப்படையில் கணக்குகளை தயாரித்தல். |
| (ஆ) ஆளணி வேதனம் மற்றும் செயற்பாட்டு | -மேற்படி- | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| செலவினங்களின் கூட்டுத்தொகையான ரூபா 82,802,104 தொகை காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், அது ரூபா 71,948,762 ஆக ரூபா 10,853,342 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) ஆண்டினுள்ளான முற்பணத் தொகையில் அறவீடுகள் ரூபா 2,112,768 ஆன போதிலும், அது ரூபா 61,993 ஆக காசுப்பாய்ச்சல் கூற்றுக்கு எடுக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம், செயல்நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிக்கும் போது, வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைப்பாட்டுத் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் ஆகியன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிக்கும் போது 2014 பெப்ரவரி 17 அந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் தயாரிக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |